**ஓம் ஈஸ்வராய நமஹ**

**ஞானாலயத்தில் ஒன்பதாம் வட்டத்தில் (Circle 9) ஆன்ம விடுதலை அடைய காத்திருக்கும் ஆத்மாக்களுக்கு அகத்தியர் மகரிஷிகள் அருளிய அற்புத உரை.**

**9ஆம் வட்டத்தில் ஒரு பகுதி ஆத்மாக்கள் செவ்வாய்க்கிழமை 01 Sept 2020 அன்று ஆத்ம விடுதலை அடையவுள்ளனர்.**

ஆன்ம விடுதலை என்றால் என்ன? ஆன்மா எனப்படும் பாதரசத் துகள்களின் தொடர் உராய்தலின் மூலம் உருவாகும் அமிலக் கழிவுகள் தோற்றுவிக்கும் திரைகள் எனும் சிறையினின்று ஆன்மாவினை மீட்டு ஈசனிடம் அருள்வதே ஆன்ம விடுதலையாகும். சிரசின் மையத்திலே உள்ள கழிவுகளை எவ்விதம் நீக்குவது? இறையாற்றலின் துணை கொண்டே இறையாற்றல் எனப்படும் ஆன்ம ஆற்றல்களாகிய நான்கு கனிம வளங்களையும் அதிக அளவினில் ஈர்த்து,உயரிய மின்காந்த இழையாக உருமாற்றி சிரசின் மத்தியில் உள்ள திரைகளின் மீது செலுத்தி அவற்றை உருக்கி கரைத்து செயலாற்றினால் கழிவுகள் நீங்கிடும்.

இறையாற்றலாம் மின்காந்த ஆற்றலை ஈர்த்துப் பெறுவது எளிதான செயல் போன்று தோன்றிடும். இருப்பினும் அறிவினால் இயலாத செயல் என்றும் உணர வேண்டும். ஒவ்வொருவடைய ஆன்மாவும் எவ்வித ஆற்றல்களை ஈர்த்து அளிக்கின்றனவோ அவற்றினையே சிரசானது எரிபொருளாய் ஏற்றுவிடும். ஆன்மாவினை சிறைகொண்டுள்ள கூடுகளோ அதீத மின்காந்த அலைகளினால் மாத்திரமே நீக்கமுறும். ஆன்ம ஆற்றலான மின்காந்த அலைகள் பெருகிட வேண்டுமெனில் உயர் ஆன்மாக்களின் துணை வேண்டும். தெய்வங்களை ஆராதித்திடும் தருணத்திலும். எண்ணங்களால் உருகிக் கரையும் தருணத்திலும் உயர் மின்காந்த அலைகளை அதிக அளவினில் பெற்றுவிட இயலும். எனினும் கலியின் எல்லைக்காலம் என்பதினாலும். நஞ்சுகள் அதிகம் சூழ்வதினாலும் இறையாற்றல்கள் முழுமையாய் சிரசுகளை எட்டுவதில்லை என்பதனைப் பூரணமாய் உணர வேண்டும். எனில் எவ்விதம் அதீத மின்காந்த அலைகளை ஈர்த்துப் பெறுவது? சிந்தனை புரியுங்கள். எந்த ஒரு மானுடரால் அச்செயலினை ஆற்ற இயல்கின்றதோ அம்மானுடரை குருவாய் ஏற்று ஆசிபெறுவதன் மூலம் அதிக அளவினிலே எளிதாய் இறை ஆற்றலை ஈர்த்துப் பெற்றுவிட இயலும்.

குரு என்பவர் ஒருவரே. மானுட உரு கொண்டு தெய்வங்கள் ஆற்றிடும் செயல்களை ஆற்றிட இயலும். கலியுக எல்லைக் காலத்திலும் பல குருமார்கள் வாழ்ந்து வருகின்றனர். இறைவனை உணர்ந்து இறையாற்றல்களையே உணவாக ஏற்று வாழ்கின்ற உயரிய குருமார்களை நாடிச் சென்று அதீத மின்காந்த அலைகளாய் பெற்று, ஆன்மாவினை சிறை கொண்டுள்ள திரைகளை நீக்கிவிட இயலும்;. எனினும் கலியின் எல்லையில் காலம் குன்றியே காணப்படுவதினாலும், கடும் முயற்சிகளும் பயிற்சிகளும் புரிய வேண்டும் எனும் காரணத்தினாலும், ஆன்மா விடுதலை எனும் முக்தி நிலையானது எளிதினில் கிட்டுவதில்லை.

திரைகள் யாவும் முழுமையாக நீங்கி கபால வாயிலும் திறவு கொண்டு ஆன்மாவானது பூரணமாய் விடுதலை பெறுவது என்பது அபூர்வச் செயலாய் அமைகின்றது. கலிகாலம் என்பதினால் சிரசில் உள்ள நஞ்சுகள் அழிபட்டாலும் உடன் மாற்று அமிலக் கழிவுகள் தோன்றிக் கொண்டேயுள்ளன. கடும் பயிற்சிகளும், முயற்சிகளும் இன்றி ஓர் ஆன்மாவானது விடுதலை அடைய இயலுமா என்றே சிந்தனை புரிந்தால் தீர்வு என்பதும் எளிதாய் கிட்டும்.

கலியுகத்தின் எல்லையில் புவிக் கோளானது தீவிரமாய் சுழல்கின்ற காரணத்தினால் மானுடர்களும் விரைந்து இயங்குகின்றார்கள். ஆன்ம விடுதலையும் விரைந்து கிட்டிவிடும் என்பதனையும் ஏற்கின்றனர். விரிந்து சுருங்கும் மனித மனமானது எதனையும் எளிதாய்ப் பெற்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தினையும் ஆழமாய் விதைக்கின்றது.

சத்யயுகமானது மலர்ச்சியுற வேண்டும் என்றும்,பூமிக கோளானது நஞ்சுகளை அகற்றிப் பொலிவுற வேண்டும் என்றும், ஈசத் துளிகளான ஆன்மாக்கள் அழிவுறலாகாது என்றுமே எண்ணி உயர் ஆன்மாக்கள் செயல்புரிகின்றனர். விண்மீன்களாய் வீற்றுள்ள ஒளி பொருந்திய ஆன்மாக்கள் பலரும் பல யுகங்களாய் கற்று அறிந்த கலையினையே இக்கலி எல்லையிலும் பயனுருத்திகின்றனர். சத்ய யுகத்தின் துவக்கத்தினிலேயே ஓர் ஆன்மாவானது தேர்வு செய்யப்படும். அவ்வான்மாவிற்கு 'கலியுகத்தினை நிறைவு செய்து சத்ய யுகத்தினை மலர்ந்திட உதவிடல் வேண்டும்' என்ற எண்ணத்தினை ஆழமாய் வேரூன்றிடும் வண்ணம் உட்செலுத்திடுவர் உயர் ஆன்மாக்கள்.

**சதுர் யுகங்களுக்கு ஒருமுறை ஓர் ஆன்மாவானது இவ்விதமே தேர்வுறும்.**

சத்ய யுகத்திலே உதித்து, எமது சீடராய்த் திகழ்ந்து இவ்வுயரிய குறிக்கோளினையே உயிரின் நிர்ணயமாய் ஏற்று,கலி எல்லை வரைப் பிறவிகளைத் தொடர்ந்து இறுதியில் சத்யயுக வித்துக்களின் தேர்வு எனும் வீரியம் வாய்ந்த நிகழ்விற்கு உதவிட ஓர் ஆன்மாவானது தேர்வுறும். அவ்வகையில் தேர்வுற்ற ஆன்மாவே இத்தருணத்தில் **ஞானாலயத்தின் குருவாய் செயல்புரியும் எமது மகளாரின் ஆன்மாவாகும்.** சத்யயுக வித்துக்களாய் உருமாறிட வேண்டுமெனில் ஒவ்வொரு ஆன்மாவும் முழுமையான ஆன்ம விடுதலைதனைப் பெற்றுவிட முனைந்திடல் இயலாது. சிறைகளாய் விளங்கிடும் ஏழு திரைகளையும் முழுமையாக நீக்கிடவும் இயலாது. எனினும் திரைகளை ஒரு புறம் நீக்கிட இயலும். சிறு வாயிலானது திறவு கொண்டாலும் ஆன்மாவானது வெளியேறி விடுதலை கண்டிடும். அவ்விதம் செயலாற்றினால் மாத்திரமே மீண்டும் சிரசினை அடைந்து உடலினிலே வாழ்ந்திட இயலும்.

சத்யயுக வித்துக்களாக உருமாறிடும் ஒவ்வொரு வட்ட மலர்களும் இவ்வகையிலேயே விடுவிக்கப்படுகின்றனர் என்பதனைப் பூரணமாய் ஏற்றிடல் வேண்டும். குருவின் திருவருளைக் கொண்டு திரைகளாகிய சிறைகளை சிறிதளவு நீக்கி ஆன்ம விடுதலை காண்கின்ற மானுடர்கள் தொடர் முயற்சிகள் புரிந்து, குருவின் அருளினையும், ஆசிகளையும் பூரணமாய்ப் பெற்று திரைகள் அனைத்தினையும் முழுமையாக நீக்கிடவே முனைதல் வேண்டும்.

திரைகளை முழுமையாக நீக்கி பூரண ஆன்ம விடுதலை காண்பது கடினமுறுகின்ற தருணத்தில்,ஆன்ம விடுதலையினை ஏற்று, அதன் பின்னர் பூரணமாய் திரைகளை நீக்குவதும் உகந்த செயலேயாகும். எனினும் இச்செயலினை ஆற்றிட தேர்வுற்ற குருவினை நாடிச் செல்வது ஒன்றே பலன் அளித்திடும். ஆன்ம விடுதலையினைப் பெற்று,அதன் மூலம் அதீத மின் காந்த அலைகளை ஈர்த்து தொடர் செயலாய் பணியாற்றுபவர்கள் இறுதியில் முழுமையான ஆன்ம ஆற்றலை உணர்ந்திடுவர். ஆன்ம தரிசனம் பெற்று, ஒளியுடலும் பெற்று,உயரிய ஒளி வீசிடும் விண்மீனாய்த் திகழ்ந்து, ஈசத் தொண்டாற்றிடவும் முனைந்திடுவர்.

பேரானந்த நிலையினைப் பெற்று,இறைவனையும், இயற்கையினையும் ஒன்றெனக் கலந்து,சத்தியத்தில் நித்தியமாய் வாழ்ந்திட்டால் எங்கும் நீக்கமுற நிறைந்திருக்கும் பரமாத்மாவினையும் உணரலாம். பரமாத்ம ஸ்வரூபத்தினையும் உணரலாம். பரமாத்மாவினோடு ஒன்றெனக் கலப்புற ஆன்ம விடுதலைப் பெற்றிடுங்கள். கனிகின்ற காலம் என்பது அனைவருக்கும் பூரண ஒளியினை நல்கட்டும்.

**வாழ்த்துகின்றோம்.**

Gnanalayam